24.11.2025 Mcop 236/2021 ம.சா1 வரதராஜன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி

பல்வேறு தேதிகளில் எனக்கு எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் அறிக்கை ம.சா.ஆ12 ஆகும். பல்வேறு தேதிகளில் எனக்கு கொடுக்கப்பட்ட மருத்துவ ரசீதுகள் எண்ணம் 3 ம.சா.ஆ13 வரிசைகள். மருத்துவ பரிந்துரை சீட்டுக்கள் ம.சா.ஆ14 ஆகும். என்னுடைய ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ1.

5ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் பி.எஸ்.சி.கணிதம் படித்துள்ளேன். நான் ஐ.டி துறையில் வேலை செய்கிறேன். 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையை படித்து பார்த்துள்ளேன். இந்த மனுவில் எதிர் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் நான் டி.என்.76.ஏ.எச். 2626 என்ற யூனிகான் இருசக்கர வாகனத்தில் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி சென்றேன் என்றால் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றேன். நான் பயணம் செய்த வாகனத்தை 3ம் எதிர்மனுதாரர் எனது தகப்பனார் ஓட்டி சென்றேன். என் மீது மோதிய வாகனம் பதிவு எண். டி.என்.76 ஏ.இ.9574 என்ற வாகனம் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்தது. விபத்து சம்பந்தமாக எனது தகப்பனார் திருமலைக்குமார் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதில் சொல்லியுள்ள விபரம் உண்மையானது என்றால் சரிதான். விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு என் அப்பா காரணம் இல்லை என்றால் சரிதான். 3ம்எதிர்மனுதாரர் நான் பயணம் செய்த வாகனத்தின் ஒட்டுனர் மற்றும் என் தகப்பனார் ஆவார். 4ம் எதிர்மனுதாரர்

எனது வாகனத்தின் உரிமையாளர் மற்றும் தாயார் ஆவார். 5ம் எதிர்மனுதாரர் எங்கள் வாகனத்தை காப்பீடு செய்த நிறுவனம் என்றால் சரிதான். விபத்தின்போது 1ம்எதிர்மனுதாருக்கு 17 வயது என்பதால் இளஞ்சிரார் நீதிமன்றத்திற்கு குற்றவியியல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு 1,2 எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு வழுங்க வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்றால் சரியல்ல. எனது வயது, வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ 13 ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்பதால் 5ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.